**நீதித்துறை நடுவர் எண்.2, நீதிமன்றம், திண்டுக்கல்**
**முன்னிலை: திரு.C. தினேஷ்குமார், B.A.LL.B(Hons)., LL.M.,**
**நீதித்துறை நடுவர் எண்.2 , திண்டுக்கல்**
**2026ம் ஆண்டு ஜூன் மாதம் 03ம் நாள் புதன்கிழமை**
**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 378/2021**
**CNR.No.TNDG03-007419-2021**

அரசுக்காக,
சார்பு ஆய்வாளர்,
தாடிக்கொம்பு காவல் நிலையம்
திண்டுக்கல்
குற்ற எண். 883/2020
சட்டப்பிரிவுகள் 294(b), 324, 506(i) of IPC

... குற்ற முறையிடுபவர்

/ எதிர் /

1) சூரியா (29/2021), -A1
த/பெ. வெங்கடேசன்,
குரும்பபட்டி, மேற்கு மீனாட்சிநாயக்கன்பட்டி,
திண்டுக்கல்.

2) வேலு (எ) வேல்முருகன் (25/2021), -A2
த/பெ. வெங்கடேசன்,
குரும்பபட்டி, மேற்கு மீனாட்சிநாயக்கன்பட்டி,
திண்டுக்கல். ...எதிரிகள்

**Case – Summary**

| *Statement as per rule 106 of criminal rules of practice, 2019* | | |
|---|---|---|
| **S.No** | **Description** | **Details** |
| 1. | Serial Number | Calender Case (C.C) No. 378 of 2021 |
| 2. | Name of the Police station and crime Number | State Represented by Sub Inspector of Police Thadicombu PS. Dindigul in Cr.No.883/2020 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | Name of the accused | Suriya – A1<br>Velu @ Velmurugan – A2 | | |
| 4. | Father's Name | Venkatesan – A1<br>Venkatesan – A2 | | |
| 5. | Occupation | - | | |
| 6. | Residence | Kurumpapatti, West Meenatchinayakkanpatti, Dindigul. – A1, A2 | | |
| 7. | Age | 29/2021 – A1<br>25/2021 – A2 | | |
| 8. | Date of occurrence | 02.08.2020 | | |
| 9. | Date of complaint<br>Date of filing Charge sheet | 03.08.2020<br>16.06.2021 | | |
| 10. | Date of apprehension | Not apprehended | | |
| 11. | Date of release on bail | - | | |
| 12. | Date of commitment | Not applicable | | |
| 13. | Date of furnishing copies of document U/s. 207 Cr.P.C. | 27.08.2024 | | |
| 14. | Date of questioning / Charge framing and plea of the accused | On 03.04.2025 the accused were questioned on substance of accusation U/s.294(b),324,506(i) of IPC. Accused denied as false case and pleaded not guilty and claims to be tried. | | |
| 15 | Date of commencements of trial -The date of examination – in chief and cross-examination of a witness | Witnesses | Examined in – Chief | Examined - in Cross |
| | | PW1 | 03.02.26 | 03.02.26 |
| | | PW2 | 03.02.26 | 03.02.26 |
| | | PW3 | 07.04.26 | 07.04.26 |
| | | PW4 | 12.05.26 | 12.05.26 |
| | | PW5 | 12.05.26 | 12.05.26 |
| | | PW6 | 12.05.26 | 12.05.26 |
| | | PW7 | 19.05.26 | 19.05.26 |

| | | |
|---|---|---|
| 16. | The date of examination of the accused under section 313 of the code – Closed of trial | 21.05.2026 |
| 17. | Sentence on order | முடிவாக, 1, 2 எதிரிகள் மீதான இதச பிரிவுகள் 294(b), 324, 506(i) ன் கீழான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்படாததால், 1, 2 எதிரிகளை குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து, குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. |
| 18. | Service of copy of Judgment or finding on accused | No. The Judgment was uploaded on CIS portal and made available in E- Courts |
| 19. | Explanation of delay | There is no inordinate in the disposal of the case |
| 20. | Property order | No case property was seized and hence no property order passed. |

இவ்வழக்கு 16.06.2021ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் ஆண்டுபட்டிகை வழக்கு எண்.378/2021 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இந்நீதிமன்றத்தில் இறுதியான விசாரணைக்கு வந்தபொழுது அரசுத்தரப்பில் கற்றறிந்த அரசு உதவி குற்றவியல் வழக்கறிஞர் நிலை–2 அவர்கள் ஆஜராகியும், குற்றம் சாட்டப்பட்ட எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. P.திருவேங்கடம், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதங்களைக் கேட்டும்,

ஆவணங்களை பார்வையிட்டும் இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்தும் வந்து இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## தீர்ப்புரை

**I. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:**

1. அரசு தரப்பு வழக்கு யாதெனில், இவ்வழக்கின் வாதியான சங்கர் என்பவர் அவரது ஊரைச்சேர்ந்த ராஜேந்திரன் என்பவருக்கு வாதியின் மனைவியின் அத்தை மகனான சந்தோஷ் என்பவரிடமிருந்து பணம் வாங்கி கொடுத்திருந்ததாகவும், கடந்த 02.08.2020ம் தேதி சுமார் 05.30 மணியளவில் வாதி, ராஜேந்திரனிடம் பணத்தை திருப்பி கேட்டபோது பணத்தை தரமுடியாது என்று ராஜேந்திரன் சொல்லவும், அங்கிருந்த இராஜேந்திரனின் தம்பி வெங்கடேசனின் மகன்களான 1,2 எதிரிகள் ஆகிய இருவரும் எங்களது பெரியப்பாவிடம் எப்படி பணம் கேட்கலாம் தேவடியா மகனே என்று அசிங்கமான வார்த்தைகளால் பேசி, 1, 2 எதிரிகள் அவர்களது கையில் வைத்திருந்த இரும்பு கம்பியால் வாதியின் தலை மற்றும் உடம்பில் அடித்து வாதிக்கு சாதாரண காயத்தை ஏற்படுத்தி, இன்னைக்கு நீ தப்பிச்சிட்ட என்றாவது ஒருநாள் உன்னைக் கொல்லாமல் விடமாட்டோம் என்று வாதியைப் பார்த்து கொலைமிரட்டல் விடுத்த குற்றத்திற்காக 1, 2 எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 294(b), 324, 506(i) இதச—வின் படி திண்டுக்கல் தாடிக்கொம்பு காவல் நிலைய சார்பு ஆய்வாளரால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**II. வழக்கின் நகல்கள் வழங்குதல் மற்றும் குற்றச்சாட்டு வனைந்து குற்றச்சாட்டை குறித்து வினவுதல்:**

2. குற்ற இறுதி அறிக்கை பரிசீலனைக்கு பின் எதிரிகளுக்கு எதிராக முகாந்திரம் இருந்ததால் இந்நீதிமன்றத்தால் மேற்படி எதிரிகளுக்கு எதிராக இவ்வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இந்நீதிமன்றத்திலிருந்து எதிரிகளுக்கு இவ்வழக்கு சம்மந்தமாக நீதிமன்றத்தில் ஆஜராக அழைப்பாணை அனுப்பி, அவர்கள் முன்னிலை ஆனவுடன் வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக கு.வி.மு.ச பிரிவு 207ன் கீழ் 27.08.2024ம் தேதியன்று வழங்கப்பட்டு போதிய அவகாசம் வழங்கப்பட்டு, வழக்காவணங்களைப் பரிசீலனை செய்து எதிரிகள் மீதான சட்டப்பிரிவுகள் 294(b), 324, 506(i) இதச–ன் கீழான குற்றச்சாட்டின் சாராம்சத்தை விளக்கிக்கூறியபோது எதிரிகள் குற்றத்தை மறுத்ததால் எதிரிகளுக்கு எதிராக இதச பிரிவுகள் 294(b), 324, 506(i)ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து தமிழில் வாசித்து விளக்கிக்கூறிய போது எதிரிகள் குற்றவாளி இல்லை என மறுத்ததால் அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

**III. அரசு தரப்பு சாட்சிகள்**

3. அரசு தரப்பில் எதிரிகள் மீதான குற்றத்தை நிரூபிக்க மொத்தம் அ.சா.1 முதல் அ.சா.7 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**IV. அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம் :**

4. இவ்வழக்கின் புகார்தாரர் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் தனது நீதிமன்ற சாட்சியத்தில் ராஜேந்திரன் என்பவர் தனது தம்பி

முறையான சந்தோஷ் என்பவரிடம் வேலை விசயமாக பணம் வாங்கியிருந்தாகவும், வாங்கிய பணத்தை திருப்பி தராததால் மேற்படி இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டதாகவும், தான் அங்கு சென்று ராஜேந்திரனிடம் பணத்தை திருப்பி கொடுக்க சொன்னதாகவும், அப்போது ராஜேந்திரன் தன்னுடனும் வாக்குவாதம் செய்ததாகவும், பின் கடந்த 02.08.2020ம் தேதி மாலை 5.30 மணியளவில் தான் தனது வீட்டில் இருந்துபோது ராஜேந்திரனின் தம்பி மகன்களான சூர்யா மற்றும் வேலு இருவரும் தனது வீட்டிற்கு வந்து தேவடியா மகனே என திட்டி, சூர்யா கையில் வைத்திருந்த இரும்பு கம்பியால் தனது தலையில் அடித்து இரத்த காயத்தை ஏற்படுத்தியதாகவும், வேலு கையில் வைத்திருந்த இரும்பு கம்பியால் தனது உடம்பில் பல இடங்களில் அடித்து ஊமைக்காயத்தை ஏற்படுத்தியதாகவும், தான் கத்தியதால் ஊரில் இருந்தவர்கள் வரவும் தன்னைப் பார்த்து கொல்லாமல் விடமாட்டேன் என சொல்லி அங்கிருந்து ஓடிவிட்டதாகவும், பின் சிகிச்சையிலிருந்தபோது போலிசார் நடந்த விவரங்களைக் கேட்டு எழுதி தன்னிடம் கையொப்பம் பெற்றதாக சாட்சியம் அளித்துள்ளார். அவர் மூலமாக புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. புகார்தாரரின் மனைவி அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது நீதிமன்ற சாட்சியத்தில், சந்தோஷ் என்பவருக்கு ராஜேந்திரன் பணத்தை திருப்பி தராததால் பிரச்சனை ஏற்பட்டதாகவும், அப்போது அ.சா.1 அங்கு சென்று ராஜேந்திரனிடம் தன்னை சாட்சியாக வைத்துதானே சந்தோஷ் பணம் கொடுத்தார், இப்போது இல்லை என்று சொல்வது சரியல்ல என்று சொன்னதாகவும், அப்போது ராஜேந்திரன் கெட்ட வார்த்தை

பேசியதால் அங்கிருந்து அ.சா.1 வந்துவிட்டதாகவும், பின் 02.08.2020ம் தேதி மாலை 05.30 மணியளவில் எதிரிகள் தனது வீட்டிற்கு வந்து கெட்ட வார்த்தையால் திட்டி இரும்பு கம்பியால் தனது கணவரை அடித்து காயப்படுத்தியதாகவும், சிகிச்சையில் இருந்தபோது போலிசார் தனது கணவரை விசாரித்து வாக்குமூலம் பெற்றதாகவும், அதில் சாட்சியாக தான் கையொப்பம் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். அவர் மூலமாக அ.சா.ஆ.2 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6. கேள்விப்பட்ட சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.3 தனது நீதிமன்ற சாட்சியத்தில், கடந்த 02.08.2020ம் தேதி ராஜேந்திரன் என்பவருக்கு தான் கடனாக ரூ.43,000/- பணத்தை சங்கரின் மூலம் கொடுத்தேன் என்றும், அதன் பின்பு அவரிடம் கொடுத்த பணம் என்ன ஆனது என கேட்டபோது வெங்கடேஷ் மகன் சூரியா மற்றும் வேலு ஆகியோர் சங்கரிடம் சென்று வாக்குவாதம் செய்திருக்கிறார்கள் என்றும், சூரியா, வேலு ஆகிய இருவரும் கம்பியை வைத்து சங்கரை அடித்ததாக சொன்னார்கள் என்றும், தான் மருத்துவமனை சென்று சங்கரைப் பார்த்ததாகவும், சங்கருக்கு தலை மற்றும் உடம்பில் ஊமைக்காயங்கள் ஏற்பட்டிருந்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

7. பார்வை மகஜர் சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.4 தனது நீதிமன்ற சாட்சியத்தில் கடந்த 03.08.2020ம் தேதி மதியம் 12.00 மணியளவில் சங்கர் வீட்டு முன்பு தான் சென்றுகொண்டிருந்தபோது போலிசார் சண்டை சம்பந்தமாக படம் வரைந்து தன்னிடம் சாட்சியாக

கையொப்பம் பெற்றதாக சாட்சியம் அளித்துள்ளார். அவர் மூலமாக பார்வை மகஜர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

8. அ.சா.5 ஆக விசாரிக்கப்பட்ட மருத்துவர் தனது நீதிமன்ற சாட்சியத்தில், கடந்த 02.08.2020ம் தேதி திண்டுக்கல் அரசு தலைமை மருத்துவமனையில் அவரச சிகிச்சை பிரிவில் பணியில் இருந்தபோது அன்றையதினம் இரவு 07.10 மணியளவில் சங்கர் என்பவரை அவரது மனைவி சிகிச்சைக்காக அழைத்து வந்ததாகவும், அவரை விசாரித்தபோது தனக்குத் தெரிந்த இரண்டு நபர்கள் இரும்பு ராடால் தலையில் அடித்ததாக கூறியதாகவும், அவரை பரிசோதித்தபோது அவருக்கு இடது பக்கவாட்டு தலையில் 2 x 1 x 1 cm அளவுள்ள சிதைந்த காயம் காணப்பட்டதாகவும், அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிக்கை அளித்ததாகவும், ஆவணங்களின் அடிப்படையில் அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கியதாக சாட்சியம் அளித்துள்ளார். அவர் மூலமாக காயச்சான்று அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

9. அ.சா.6 ஆக விசாரிக்கப்பட்ட சார்பு ஆய்வாளர் தனது நீதிமன்ற சாட்சியத்தில், வாதியிடம் புகார் வாக்குமூலம் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது குறித்தும், சம்பவயிடத்தைப் பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்தது குறித்தும், சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தது குறித்தும், பின் பணிமாறுதல் காரணமாக சென்றுவிட்டதால் வழக்கு கோப்பை சார்பு ஆய்வாளர் அனிதா வசம் ஒப்படைத்ததாக சாட்சியம் அளித்துள்ளார். அவர் மூலமாக அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

10. அ.சா.7 ஆக விசாரிக்கப்பட்ட புலன் விசாரணை அதிகாரி தனது நீதிமன்ற சாட்சியத்தில், வழக்கினை தனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு வாதிக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் பொன்னர் என்பவரை விசாரித்து காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்பு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சார்பு ஆய்வாளர் லிடியா செல்வி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின் தனது புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 294(b), 324, 506(i) இதச வின் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

**V.எதிரிகளிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ) பிரிவின் கீழ் வினவுதல்**

11. அரசு தரப்பில் சாட்சியத்தை முடித்துக் கொண்ட பின்பு எதிரிகளுக்கு பாதகமாக அரசு தரப்பு சாட்சிகள் அளித்த சங்கதிகளை கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் 21.05.2026 நாளன்று தொகுத்தளித்து வினாவியபோது அரசு தரப்பு சாட்சியங்களை "பொய் சாட்சி" என்று சாட்சியங்களை மறுத்தனர். எதிரிகள் தரப்பில் சாட்சிகள் இல்லை என கூறினர். அத்துடன் எதிரிகள் தரப்பு சாட்சி விசாரணை முடிவுற்றது.

**VI. வாதுரைகள்:**

**1. அரசு தரப்பில்:**

12. கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வாதிடும் போது எதிரிகளுக்கு எதிரான வழக்கு தகுந்த சாட்சிய, சான்றாவணங்களின் அடிப்படையில் நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சிகள் அரசு தரப்பு வழக்கிற்கு ஒத்துரைத்து சாட்சியம்

அளித்துள்ளதாலும், பாதிக்கப்பட்ட நபருக்கு சாதாரண காயம் ஏற்பட்டுள்ளது என்பதற்கு காயச்சான்று குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், அரசு தரப்பு எதிரிகளின் மீதான குற்றச்சாட்டை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், இவ்வழக்கின் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டும், எதிரிகளுக்கு தண்டனை வழங்க வேண்டுமென்று வாதிட்டார்.

**2. எதிரிகள் தரப்பில்:**

13. எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடும் போது எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் எதுவும் நிரூபிக்கப்படவில்லை என்றும், இவ்வழக்கில் எதிரிகளுக்கு எதிராக எந்த சாட்சியமும் இல்லை என்றும், இவ்வழக்கில் எதிரிகள் பயன்படுத்தியதாக சொல்லப்படும் இரும்பு கம்பியை கைப்பற்றி நீதிமன்றத்தில் சமர்பிக்கவில்லை என்றும், எதிரிகள் மீது இவ்வழக்கு தவறாக பதியப்பட்டுள்ளதாகவும், இவ்வழக்கில் வேறு கண்ணுற்ற சாட்சிகள் யாரையும் சாட்சியாக சேர்த்து விசாரிக்கப்படவில்லை என்றும், அரசு தரப்பில் இவ்வழக்கை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை விடுதலை செய்ய வேண்டுமென்று வாதிட்டார்.

**VI. ஆய்விற்குரிய பிரச்சனை:**

14. இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை யாதெனில் எதிரிகளுக்கு எதிரான அரசு தரப்பு குற்றச்சாட்டுக்கள் நியாயமான முறையில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே ஆகும்.

**VII. தீர்வு:–**

15. அரசு தரப்பானது, இவ்வழக்கின் வாதியான சங்கர் என்பவர் அவரது ஊரைச்சேர்ந்த ராஜேந்திரன் என்பவருக்கு வாதியின் மனைவியின் அத்தை மகனான சந்தோஷ் என்பவரிடமிருந்து பணம் வாங்கி கொடுத்திருந்ததாகவும், கடந்த 02.08.2020ம் தேதி சுமார் 05.30 மணியளவில் வாதி, ராஜேந்திரனிடம் பணத்தை திருப்பி கேட்டபோது பணத்தை தரமுடியாது என்று ராஜேந்திரன் சொல்லவும், அங்கிருந்த இராஜேந்திரனின் தம்பி வெங்கடேசனின் மகன்களான 1,2 எதிரிகள் ஆகிய இருவரும் எங்களது பெரியப்பாவிடம் எப்படி பணம் கேட்கலாம் தேவடியா மகனே என்று அசிங்கமான வார்த்தைகளால் பேசி, 1, 2 எதிரிகள் அவர்களது கையில் வைத்திருந்த இரும்பு கம்பியால் வாதியின் தலை மற்றும் உடம்பில் அடித்து வாதிக்கு சாதாரண காயத்தை ஏற்படுத்தி, இன்னைக்கு நீ தப்பிச்சிட்ட என்றாவது ஒருநாள் உன்னைக் கொல்லாமல் விடமாட்டோம் என்று வாதியைப் பார்த்து கொலைமிரட்டல் விடுத்த குற்றத்திற்காக 1, 2 எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 294(b), 324, 506(i) இதச–வின் கீழ் குற்றம் சாட்டியுள்ளது.

16. அரசு தரப்பில், எதிரிகள் இருவரும் புகார்தாரரை இரும்பு கம்பியால் தலை மற்றும் உடம்பில் அடித்து சிறுகாயத்தை ஏற்படுத்தியதாக எதிரிகள் மீது இதச பிரிவு 324ன் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

i. இதச பிரிவு 324ன் கீழ், ஒருவருக்கு சாதாரணகாயத்தை உண்டாக்கவேண்டும் என்ற தீய எண்ணத்தோடு மற்றும் தீய செயலால் ஒருவருக்கு மரணத்தை உண்டாக்குவதற்காக, சுடுதல், குத்துதல்,

வெட்டுதல் ஆகியவற்றிற்காக பயன்படும் கருவிகளால் அல்லது மரணத்தை உண்டாக்கக்கூடிய விதத்தில் நெருப்பில் காய்ச்சப்பட்ட பொருட்கள் அல்லது மரண அபாயத்தை உண்டாக்கக்கூடிய விஷம், வெடிமருந்துகள், துருப்பிடிக்கச் செய்யும் பொருட்களை வைத்து யாருக்காவது சாதாரணகாயம் காயம் ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

ii. மேற்படி சாதாரணகாயமானது எதிரியினால் ஏற்பட்டது என்று நிரூபித்தல் வேண்டும்.

17. அரசு தரப்பு வழக்கின் படி, எதிரிகள் மீதான இதச பிரிவு 324–ன் கீழான குற்றச்சாட்டை நிரூபிக்கப்பட்டுள்ளதா என்று பார்க்கும்போது, அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்ட புகாரில் "நான் வெளியே வந்து வீண் பிரச்சனை வேண்டாம் என கேட்டபோது சூர்யா தன் கையில் வைத்திருந்த இரும்பு கம்பியால் என் தலையில் அடித்து ரத்தகாயம் ஏற்படுத்தினார். வேலு என்பவர் இரும்பு கம்பியால் எனது உடம்பு முழுவதும் அடித்து ஊமைக்காயம் ஏற்படுத்தினார்" என்று புகார்தாரர் புகார் அளித்துள்ளார். மேலும், அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்ட புகார்தாரர் அவரது முதல் விசாரணையில், " கடந்த 02.08.2020ம் தேதி மாலை 05.30 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தபோது ராஜேந்திரனின் தம்பி மகன்களான சூர்யா மற்றும் வேலு இருவரும் எனது வீட்டிற்கு வந்து தேவடியாமகனே என திட்டி சூர்யா கையில் வைத்திருந்த இரும்பு கம்பியல் எனது தலையில் அடித்து இரத்த காயத்தை ஏற்படுத்தினார். சூர்யாவின் தம்பி வேலு கையில் வைத்திருந்த இரும்பு கம்பியால் எனது உடம்பில் பல இடங்களில் அடித்து ஊமைக்காயத்தை ஏற்படுத்தினார்" என்று சாட்சியம் அளித்துள்ளார்.

18. மேலும், இவ்வழக்கில் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையைப் பரிசீலனை செய்யும்போதும் மேற்சொன்ன சங்கதிகள் இடம்பெற்றுள்ளன. மேலும், இவ்வழக்கில் மற்ற சாட்சிகள் அளித்த சாட்சியங்களைப் பரிசீலனை செய்யும்போதும், அ.சா.5 ஆக விசாரிக்கப்பட்ட மருத்துவர் மற்றும் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்ட காயச்சான்றைப் பரிசீலனை செய்யும்போதும், புகார்தாரருக்கு சிறுகாயம் ஏற்பட்டுள்ளது என்று தெரிய வருகிறது.

19. ஆனால் மேற்படி காயம் எதிரிகளின் குற்ற செயலால் தான் ஏற்பட்டதா என்று பரிசீலனை செய்ய வேண்டும். அவ்வாறு பார்க்கையில் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி, எதிரிகளின் குற்ற செயல் குறித்து உறுதியூட்டும் வகையில் எந்தவிதமான சாட்சியமும் அளிக்கவில்லை. மேலும், எதிரிகள் பயன்படுத்தியதாக சொல்லப்படும் இரும்பு கம்பியை புலன் விசாரணை அதிகாரி கைப்பற்றி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யவில்லை. மேலும், அ.சா.7 ஆக விசாரிக்கப்பட்ட புலன் விசாரணை அதிகாரி அவரது குறுக்கு விசாரணையில் "சம்பவ இடத்தில் இரத்தம்பட்ட மண் மற்றும் இரத்தம்படாத மண் ஆகியவற்றை கைப்பற்றி ஆய்விற்கு அனுப்பவில்லை என்றால் சரிதான். சம்பவ நேரத்தில் அ.சா.1ற்கு காயம் ஏற்பட்டிருந்தால் காயத்தின் விளைவாக இரத்தம் அவரது சட்டையில் பட்டிருக்கும் என்றால் சரிதான். அவ்வாறு அ.சா.1ன் இரத்தம்பட்ட ஆடையை கைப்பற்றி ஆய்விற்கு அனுப்பவில்லை என்றால் சரிதான்" என்று சாட்சியம் அளித்துள்ளபோது, மேற்படி எதிரிகள் தான் கம்பியால் தாக்கினார்கள் என்றும், அதன் விளைவாக தான் இரத்த காயம் ஏற்பட்டது என்று உறுதியூட்டும் வகையில் தனது புலன் விசாரணையின்

மூலமோ, அல்லது நீதிமன்ற சாட்சியத்தின் மூலமாகவோ நிரூபிக்கவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

20. மேலும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அ.சா.6 அவரது குறுக்கு விசாரணையில் " அ.சா.1 சங்கர், அ.சா.2 ஜோதி கணவன் – மனைவி என்றால் சரிதான். அ.சா.1 சங்கர், அ.சா.2 ஜோதி தவிர இவ்வழக்கில் வேறு சாட்சிகளை கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான்" என்று சாட்சியம் அளித்துள்ளார். மேலும், இவ்வழக்கில் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்ட பார்வை மகஜரைப் பரிசீலனை செய்யும்போது, சம்பவமானது புகார்தாரரின் வீட்டு வாசலில் நடைபெற்றதாக தெரிய வருகிறது. மேலும், சம்பவ இடமானது பொது இடமாக இருந்தபோதிலும், வேறு கண்ணுற்ற சாட்சிகள் யாரையும் சாட்சியாக முன்னிலைப்படுத்தி சாட்சியம் அளிக்கவில்லை என்பதாலும், எதிரிகள் கம்பியால் தான் அ.சா.1ஐ தாக்கினார்கள் என்று புகாரிலும் அனைத்து சாட்சிகளும் குறிப்பிட்டு சொல்லியுள்ளபோது எதிரிகள் பயன்படுத்தியதாக சொல்லப்படும் இரும்பு கம்பியை கைப்பற்றி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யவில்லை என்பதாலும், எதிரிகள் மீதான 324 இதச வின் கீழான குற்றச்சாட்டை அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

21. மேலும், எதிரிகள் மீது 294(b) இதச வின் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. சாட்சியங்களை பரிசீலனை செய்யும் முன்பாக இதச பிரிவு 294(பி)யின் அகக்கூறுகளைப் பரிசீலனை செய்ய வேண்டும்.

"S. 294(b) "Whoever,Whoever, to the annoyance of others, (a) does any obscene act in any public place, or (b) sings recites or utters any obscene songs, ballad or words, in or near any public place, Shall be punished with imprisonment of either description for a term which may extend to three months, or with fine, or with both".

1. சம்பவமானது பொது இடத்தில் நடைபெற்று இருக்க வேண்டும். மற்றும் என்னென்ன வார்த்தைகள் கூறியுள்ளார் என்று சாட்சிகள் குறிப்பிட்டு சொல்லி இருக்க வேண்டும்.

2. அவ்வாறு எதிரிகள் அ.சா.1ஐப் பார்த்து அசிங்கமாக திட்டியதில் அ.சா.1க்கோ அல்லது அருகில் இருந்தவர்களுக்கோ அவமானமோ அருவருப்போ ஏற்பட்டதாக சாட்சிகள் சாட்சியம் அளித்து இருக்க வேண்டும்.

3. மேலும் புகாரில் குறிப்பிட்டுள்ளது போல் எந்தெந்த ஆபாசமான வார்த்தைகளை எதிரிகள் பயன்படுத்தினார்கள் என்பதை சாட்சிகள் சாட்சியமளித்திருக்க வேண்டும்.

22. மேற்சொன்னவாறு எதிரிகள் மீதான சட்டப்பிரிவு 294(b) இதச வின் கீழான குற்றச்சாட்டை அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா என்று பார்க்கும்போது, அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்ட புகாரைப் பரிசீலனை செய்யும்போது, அதில் " இராஜேந்திரனின் தம்பி மகன்களான வெங்கடேஷ் மகன் சூர்யா மற்றும் வேலு என் வீட்டின் அருகே வந்து எனது பெரியப்பாவிடம் எப்படி பணம் கேட்கலாம் என்று டேய் தேவிடியா மகனே வெளியே வாடா என்று அசிங்கமான வார்த்தைகளால் பேசினர்" என்று குறிப்பிட்டு புகார்தாரர் புகார் அளித்துள்ளார். மேலும், அ.சா.1 ஆக

விசாரிக்கப்பட்ட புகார்தாரர் அவரது முதல் விசாரணையில், "ராஜேந்திரனின் தம்பி மகன்களான சூர்யா மற்றும் வேலு இருவரும் எனது வீட்டிற்கு வந்து தேவிடியா மகனே என திட்டி சூர்யா கையில் வைத்திருந்த இரும்பு கம்பியால் எனது தலையில் அடித்து இரத்த காயத்தை ஏற்படுத்தினார்" என்று அந்த வார்த்தையைக் குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளார். மேலும், சம்பவ இடமானது பொது இடமாக இருந்தபோதிலும், மற்ற கண்ணுற்ற சாட்சிகள் யாரும் முன்னிலைப்படுத்தப்பட்டு அரசு தரப்பு வழக்கிற்கு உறுதியூட்டும் வகையில் சாட்சியம் அளிக்கவில்லை. மேலும், எதிரிகள் ஆபாசமான வார்த்தையால் திட்டியதால் தனக்கோ, பிறருக்கோ அவமானமோ, அருவருப்போ ஏற்பட்டதாக எந்தவொரு சாட்சியும் சாட்சியம் அளிக்கவில்லை.

23. ஆகவே எதிரிகள் புகார்தாரரைப் பார்த்து ஆபாசமான வார்த்தைகளால் திட்டினர் என்று இதச பிரிவு 294(b)ன் கீழான குற்றச்சாட்டை அரசு தரப்பால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

24. மேலும், அரசு தரப்பு வழக்கானது, எதிரிகள் புகார்தாரரை அசிங்கமான வார்த்தைகளால் திட்டி அவரை இரும்பு கம்பியால் அடித்து காயப்படுத்தி, இன்னைக்கு நீ தப்பிச்சிட்ட என்றாவது ஒருநாள் உன்னைக் கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்ததாக அரசு தரப்பால் எதிரிகளின் மீது இதச பிரிவு 506(i)ன் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

25. குற்றமுறு அச்சுறுத்தலை நிரூபிக்க வேண்டும் என்றால் வெறும் வார்த்தைகளால் மிரட்டுவதை வைத்து மட்டுமே மரண பயமோ, அல்லது அந்த மிரட்டலால் வேறு விளைவோ ஏற்படும் என்று கருத முடியாது. மாறாக அந்த குற்றமுறு மிரட்டலை அந்தந்த வழக்கின் சூழ்நிலைக்கு ஏற்பவும் தகுந்த சாட்சியங்கள் வைத்தே ஒருவருக்கு மரண பயத்தையோ அல்லது காயத்தை ஏற்படுத்தக்கூடிய மிரட்டலாகவோ, இருக்கக்கூடும் என்று நிரூபித்தல் வேண்டும்.

26. அவ்வாறு பார்க்கையில் இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட நபரான அ.சா.1 தனது முதல் விசாரணையில் "நான் கத்தியதால் ஊரில் இருந்தவர்கள் வரவும் என்னைப் பார்த்து கொல்லாமல் விடமாட்டேன் என சொல்லி அங்கிருந்து ஓடிவிட்டார்கள்" என்று சாட்சியம் அளித்துள்ளாரே தவிர, அந்த கொலை மிரட்டலால் புகார்தாரருக்கோ அல்லது பிறருக்கோ மரண பயத்தையோ அல்லது காயத்தை விளைவிக்கும் மிரட்டலாக இருந்தது என்று எந்தவிதமான சாட்சியமும் அளிக்கவில்லை. மேலும், அ.சா.1ன் மனைவி மற்றும் கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 அவரது முதல் விசாரணையில் எதிரிகள் கொலைமிரட்டல் விடுத்ததாக எந்தவொரு சாட்சியமும் அளிக்கவில்லை. மேலும், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி எதிரிகள் புகார்தாரரைப் பார்த்து கொலை மிரட்டல் விடுத்தனர் என்பதற்கு வேறு கண்ணுற்ற சாட்சிகளையோ அல்லது கேள்விப்பட்ட சாட்சிகளையோ சாட்சியாக முன்னிலைப்படுத்தி உறுதியூட்டும் வகையில் சாட்சியம் அளிக்கவில்லை. ஆகவே எதிரிகள் மீதான இதச பிரிவு 506 (i)–ன் கீழான குற்றச்சாட்டை அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

27. முடிவாக, 1, 2 எதிரிகள் மீதான இதச பிரிவுகள் 294(b), 324, 506(i) ன் கீழான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்படாததால், 1, 2 எதிரிகளை குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து, குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

28. இவ்வழக்கின் தீர்ப்பின் மீது மேல்முறையீடு செய்யப்பட்டிருந்தால், மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆஜராவதற்காக பெறப்பட்ட கு.வி.மு.ச. 437(A) பிணைப்பத்திரமானது 6 மாத காலத்திற்கு அமலில் இருக்கும் என்றும் பின்னர் தானாக இரத்தாகிவிடும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் அலுவலக கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு 2026ம் ஆண்டு ஜூன் மாதம் 03–ம் நாள் புதன்கிழமை, இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.06.03 15:22:08 +0530

நீதித்துறை நடுவர் எண்.2
திண்டுக்கல்.

**I. அரசு தரப்பு சாட்சிகள்**

| Sl. No. | Examined as | Name of Witness | Date of examination | Exhibits Marked |
|---|---|---|---|---|
| 1. | அ.சா.1 | சங்கர்<br>த/பெ. பெரியசாமி | 03.02.2026 | அ.சா.ஆ.1, |
| 2. | அ.சா.2 | ஜோதி<br>க/பெ. சங்கர் | 03.02.2026 | அ.சா.ஆ.2 |
| 3. | அ.சா.3 | சந்தோஷ்<br>த/பெ.மாரிமுத்து | 07.04.2026 | – |
| 4. | அ.சா.4 | பார்த்திபன்<br>த/பெ.மாரிமுத்து | 12.05.2026 | அ.சா.ஆ.3 |
| 5. | அ.சா.5 | பொன்னர்<br>த/பெ. ராமன் | 12.05.2026 | அ.சா.ஆ.4 |
| 6. | அ.சா.6 | லிடியா செல்வி<br>(சார்பு ஆய்வாளர்) | 12.05.2026 | அ.சா.ஆ.5<br>அ.சா.ஆ.6 |
| 7. | அ.சா.7 | அனிதா<br>(சார்பு ஆய்வாளர்) | 19.05.2026 | – |

**II. அரசு தரப்பு சான்றாவணங்கள் :**

| Sl. No. | Exhibits | Marked through | Date of Document | Description of document |
|---|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | அ.சா.1 | 03.08.20 | புகார் |
| 2. | அ.சா.ஆ.2 | அ.சா.5 | 03.08.20 | புகார் வாக்குமூலத்தில் உள்ள சாட்சிக் கையொப்பம் |
| 3. | அ.சா.ஆ.3 | அ.சா.5 | 03.08.20 | பார்வை மகஜர் |
| 4. | அ.சா.ஆ.4 | அ.சா.5 | 02.08.20 | காயச்சான்று |
| 5. | அ.சா.ஆ.5 | அ.சா.5 | 03.08.20 | முதல் தகவல் அறிக்கை |
| 6. | அ.சா.ஆ.6 | அ.சா.5 | 03.08.20 | வரைபடம் |

**III. <u>அரசு தரப்பு சான்றுப் பொருள்கள்</u> – இல்லை**

**IV. <u>எதிரிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மற்றும் சான்றுப் பொருள்கள்</u> – இல்லை**

DINESH KUMAR C Digitally signed by DINESH KUMAR C Date: 2026.06.03 15:22:01 +0530

நீதித்துறை நடுவர் எண்.2
திண்டுக்கல்.

**<u>குறிப்பு:</u>**

1. வழக்கின் முடிவு இருதரப்பினருக்கும் தெரிவிக்கப்பட்டது.
2. எதிரிகள் வழக்கு விசாரணையின் போது பிணையில் இருந்தனர்.
3. எந்த சாட்சிகளும் 3 முறைக்குமேல் நிறுத்திவைக்கப்படவில்லை.